**16.11.2022**

**OS.No. 15/2021 DW : 1, திரு. பாண்டுரங்கன்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

1ம் வாதி என் மூத்த சகோதரர். பாகம் கேட்டு வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என் தாயாரின் சொத்துக்களின் மீது பாகம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என் தாயார் உயில் எழுதி கொடுத்ததாக சொல்லி வாதிகள் பாகம் கேட்கிறார்கள். இவ்வழக்கிற்கு முன்னர் வாதிகள் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார்கள். அதற்கு நானும் பதில் அறிவிப்பு அனுப்பினேன். என் தாயார் வாதிகளுக்கு உயில் எதையும் எழுதி வைக்கவில்லை என்று என் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். வாதிகள் அவர்கள் தரப்பில் ஒரு உயிலை தாக்கல் செய்துள்ளார்கள். அந்த உயிலை பார்த்தேனா என்று கேட்டால் என் வழக்கறிஞர் அந்த உயிலின் ஜெராக்ஸ் நகலை காட்டினார். அந்த உயிலை படித்து பார்த்தேன். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று கேட்டால் 1ம் வாதி மற்றும் என் வாரிசுகளுக்கு சொத்து சேர வேண்டும் என்று அதில் எழுதப்பட்டுள்ளது. பூபதி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுக்கும் எனக்கும் இடையே விரோதம் எதுவும் இல்லை. என் தந்தை வாதிகளுக்கு உயில் எதையும் எழுதி வைக்கவில்லை என்று என் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் உயிலில் உள்ள கைரேகை என் தாயாரின் கைரேகை இல்லை என்று கூறியுள்ளேன். அது தான் உண்மையாகும். கைரேகை என் தாயாரின் கைரேகை இல்லை என்று எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை. என் தாயார் என்

பாதுகாப்பில் இருந்ததால் அவர் உயிலே எழுதி கொடுக்க வாய்ப்பே இல்லை என்று கூறுகிறேன். என்னுடைய உயிலில் உள்ள கைரேகையையும், வாதிகள் தாக்கல் செய்துள்ள உயிலில் உள்ள கைரேகையையும் கைரேகை நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. வாதிகள் உயிலில் உள்ள கைரேகை என் தாயாரின் கைரேகை என்று நிபுணர் அறிக்கை கொடுத்தால் வாதிகளுக்குரிய பங்கை உயில்படி கொடுக்க தயாரா என்று கேட்டால் என் உயில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் வாதிகளுக்கு பங்கை கொடுக்க மாட்டேன். 14.11.2018ல் எனக்கு திருமணம் ஆனது. என் திருமணத்தின் போது என் தாயாரை என் வீட்டில் விட்டுவிட்டு ஒரு ஆளை பாதுகாப்பிற்கு வைத்துவிட்டு நான் திருமணம் செய்தேன். என் தாயாருக்கு என் திருமணத்தின் போது உடல் நிலையும் சரியில்லாமல் இருந்தது, மனநிலையும் சரியில்லாமல் இருந்தது. அவர் இறப்பதற்கு முன்பு 1½ மாத காலமாக மனநிலை சரியில்லாமல் இருந்தார். 2008ல் என் தாயார் எனக்கு உயில் எழுதி வைக்க வேண்டி அவசியம் என்ன என்று கேட்டால் 2008ல் என் தாயாருக்கு கருப்பையில் கட்டி ஏற்பட்டு கருப்பை அகற்றினார்கள். என் தாயார் இறந்துவிடுவார் என்ற முறையில் எனக்கு உயில் எழுதி வைத்தார். அப்போது 1ம் வாதிக்கும் என் தாயாருக்கும் இடையே என் தந்தையின் சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு பாக வழக்கு நடந்துகொண்டிருந்தது. அதன்பிறகு அவ்வழக்கில் சமாதானம் ஏற்பட்டதா என்று கேட்டால் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

என் தாயாருக்கும் 1ம் வாதிக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டு என் தந்தையின் சொத்துக்களை எனக்கும் 1ம் வாதிக்கும் அவர் பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. நல்ல சொத்துக்களை 1ம் வாதி எடுத்துக்கொண்டு உதவாத சொத்துக்களை எனக்கு கொடுத்துவிட்டதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன். அது எப்போது நடந்தது என்று கேட்டால் 1ம் வாதி சொத்துக்களை என்னையும் அனுபவிக்க முடியாமல் இடையூறு செய்கிறார். நான் நடவடிக்கை எடுத்தேனா என்று கேட்டால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். 1ம் வாதி அவரது மகனை வைத்து என்னை அடித்துவிடுவார். 1ம் வாதியின் மீது 10, 15 தடவை புகார் கொடுத்திருக்கிறேன். நானும், 1ம் வாதியும் சொத்துக்களை பிரித்துக் கொண்டோம் என்றும் தாவா சொத்துக்களை வாதி கேட்டுவிடுவார் என்று பயந்து நான் வாதிகள் மீது அடிக்கடி புகார்களை கொடுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. என் தாயாருக்கும் 1ம் வாதிக்கும் இடையே பாக வழக்கு நடந்து வந்ததால் 1ம் வாதிக்கு எதிராக ஏதேனும் செய்யவேண்டும் என்பதற்காக என் தாயார் எனக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு உடல் நிலை சரியாகி என் தந்தையின் சொத்துக்களை என் தாயார் எனக்கும் 1ம் வாதிக்கும் என் தாயார் பிரித்து கொடுத்தார் என்றும் என் தாயார் 1ம் வாதியுடன் இனக்கமாக தான் இருந்தார் என்றால் சரியல்ல. ஆகவே இறக்கும் தருவாயில் என் தாயார் சொத்துக்கள் அவரது பேரப்பிள்ளைகளுக்கு சேர வேண்டும் என்று ஒரு உயிலை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அவருடைய விருப்பப்படி தாவா சொத்து

2, 3 வாதிகளுக்கும் என் வாரிசுகளுக்கு மட்டுமே சேர வேண்டும் என்றால் சரியல்ல. 21.12.2018ல் என் தாயார் காலமானார். என் தாயார் இறக்கும்போது நான் பாப்பரம் பாக்கம் கிராமத்தில் இருந்தேன். என் தாயார் இறந்த செய்தியே தெரியாது என்றும் 1ம் வாதி தான் தெரியபடுத்தினார் என்றால் சரியல்ல. என் தாயார் இறந்ததற்கு 1ம் வாதி ஈமச்சடங்குகளை செய்தார் என்றால் அவர் மூத்தவர் என்பதால் கொல்லிமட்டும் வைத்தார் செலவுகளை நான் தான் செய்தேன். என் தாயார் இறக்கும் தருவாயில் வாதிகளின் பாதுகாப்பில் தான் இருந்தார் என்றும் உயிலை மறுக்கவேண்டும் என்பதற்காக என் பாதுகாப்பில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே தான் என் தாயாரின் வருப்பப்படி சாட்சிகள் முன்னிலையில் கடைசி உயில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.வா.ஆ.21ஐ நான் காவல் நிலையத்தில் கொடுத்ததற்கு எனக்கு ரசீது எதையும் கொடுக்கவில்லை. வாதிகள் என் தாயாரை 10.11.2018 அன்று கடத்தி சென்றுவிட்டதாக புகார் கொடுத்தேன். 28 நாட்கள் கழித்து தான் அதாவது 08.12.2018 அன்று தான் பி.சா.வா.ஆ.21 புகார் கொடுத்தேன். என் தாயார் உயில் எழுத போவதாக தெரிந்து கொண்டு 2, 3 நாட்களுக்கு முன்னர் போலீஸாரை வைத்து வாதிகளை மிரட்டுவதற்காக பி.சா.வா.ஆ.21 பொய் புகாரை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புதிதாக திருமணம் செய்ததால் என் மனைவியுடன் தனியாக இருந்தேன் என்றும் என் தாயார் வாதிகளின் பாதுகாப்பில் இருந்தார் என்றும் என் தாயார் இறந்ததும் வீட்டில் உள்ள மருத்துவ

ஆவணங்களை எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய உயிலின் அசல் என்னிடம் இருக்கிறது அதை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்திருக்கிறேன். என்னுடைய உயில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கு தான் முக்கியதுவம் கொடுக்கிறேன் என்றும் கடைசி உயில் தான் செல்லும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் எனக்கு முறையாக வரவில்லை என்றும் அதை அபகரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே கதவு எண்ணுக்கு நானும் என் தாயாரும் சேர்ந்து ஒரு குடும்ப அட்டையும் வாதிகள் ஒரு குடும்ப அட்டையும் வாங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. இரண்டு கதவு எண்களும் வெவ்வேரானதாகும். ரேஷன் பொருட்களை வாங்குவதற்காக நாங்கள் குடும்ப அட்டையை தனியாக வாங்கினோம் என்றும் நான் தனித்தனியாக தான் இருந்தோம் என்றால் சரியல்ல. என் தந்தையின் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை கேட்டு இதுவரை நான் நடவடிக்கை எடுக்கவில்லை. என் தாயாரின் சொத்துக்களை முழுமையாக அடைவதற்காக வாதிகளின் உயிலை மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.